# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## ECS 3.15 – ECONOMIC DEVELOPMENT - I

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. ‘ஆரம்பத்தில் குறைவிருத்திப் பொருளாதாரங்களாக அடையாளம் காணப்பட்ட பல நாடுகள் இன்று அபிவிருத்திப் பாதையில் முன்னேறியுள்ளன.’ அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டிகளை பொருத்தமான உதாரணங்களுடன் இத்தகைய நாடுகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

02. “ஹாட்.டோமர்” மாதிரிஉரு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், உள்நாட்டு சேமிப்புக்கும் இடையே நேர்கணியத் தொடர்பு காணப்படுவதாகக் கூறுகின்றது.” நடைமுறை பொருளாதாரங்களின் அபிவிருத்தியினை விளக்குவதில் மேற்கூறிய கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. அ) ‘சமச்சீர் வளர்ச்சிக் கோட்பாடு, அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கே பொருத்தமானது’ என்னும் கூற்று எந்த அளவிற்கு நியாயமானது? உமது விடையை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) பொருளாதாரம் ஒன்றின் சமனற்ற தன்மை எவ்வாறு அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் என்பதனை W. A. Lewis என்பவரின் அபிவிருத்தி மாதிரி உருவினைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

04. பெரும்பாலான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஊழியம் மிகப்பிரதான உற்பத்திக் காரணியாகக் காணப்படுகின்றது. ஊழியத்தினை மூலதனமாக்குதல் தொடர்பான ‘நேக்ஸ்’ என்பவரது வாதத்தின் அடிப்படையில் இந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

05 உலகின் பல்வேறு நாடுகளில் அபிவிருத்தியில் பிராந்திய வேறுபாடுகள் காணப்படுவதற்கான காரணங்களை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

06. கிராமிய, நகர்ப்புற பொருளாதார அபிவிருத்திக்கிடையிலான வேறுபாட்டிற்கான அடிப்படைக் காரணிகளை இலங்கையுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

07. ‘இலங்கை அரசு நீண்டகாலமாக பாடசாலைக் கல்வி தொடக்கம், உயர்கல்வி வரை வழங்கிவரும் மானியம், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

(தொடர்............2ல்)

08. பின்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

அ) கருவளவாக்கம் பற்றிய சிற்றினப் பொருளியல், வீட்டுத்துறைக் கோட்பாடு

(06 புள்ளிகள்)

ஆ) வளர்ச்சியடைந்த நாடுகள் முன்னெடுத்துச் செல்லும், புதிய கண்டுபிடிப்புக்களுக்கான செலவும், பொருளாதார வளர்ச்சியும்.

(06 புள்ளிகள்)

இ) முறைசாரா உற்பத்தியும், கிராமிய அபிவிருத்தியும்

(08 புள்ளிகள்)

*****